இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 353 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆடி 18 – திங்கள்கிழமை 03 ஆகஸ்ட் 2026 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 353 : Thiruvalluvar Year - 2057 - Aadi 18 - Monday 03 August 2026 - Kovai ★★ 12 Pages ₹ 5.00

## காவிரிப் பிரச்சினை ; அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டுவது எப்போது? முடியுமா முடியாதா?

# தனி ஆவர்த்தனம் செய்ய நினைத்து தனிமைப்பட்டு நிற்கிறார் முதல்வர்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் விமர்சனம்!



**சென்னை, ஆக. 3 -**

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள தமது சமூக வலைதளப் பதிவில், “காவிரி நதிநீர் பிரச்சினையில் தனி ஆவர்த்தனம் செய்ய நினைத்துத் தனிமைப்பட்டு நிற்கிறார் முதல்வர்” என்றும் “இப்பிரச்சினையில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டுவது எப்போது? முடியுமா முடியாதா?” என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.**

தமிழ்நாட்டு விவசாயிகளை வஞ்சிக்கும் வகையிலும், குறிப்பாகக் காவிரி டெல்டா பகுதிகளை வறண்ட பாலைவனமாக்கும் வகையிலும் மேகதாது அணை கட்ட கருநாடக அரசு திட்டமிட்டு வருகிறது.

இப்பிரச்சினையில் பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். ஒன்றிய அரசு கருநாடகாவிற்கு மறை முகமாக ஆதரவளித்து வருகிறது.

இந்நிலையில், தமிழ்நாடு அரசு தன் உரிமைகளை வலியுறுத்தி, இந்த முயற்சிக்கு எதிராக உச்சநீதி மன்றத்தை அணுகி தன் வாழ்வாதார உரிமையைப் பாதுகாக்க வேண்டும்.

அடுத்த கட்ட சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், கருநாடக அரசுடன் தமிழ்நாடு அரசு பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதைத் தமிழ்நாட்டிலுள்ள, அநேகமாக ஆளுங்கட்சியாக உள்ள த.வெ.க.வைத் தவிர மற்றவர்கள் ஏற்கவில்லை.

அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று, அவர்களுடைய கூட்டணிக் கட்சியினர் விடுத்த வேண்டுகோளையும்கூட ஏற்காமல், காவிரி நதி நீர்ப் பங்கீடு பற்றிய வரலாறு அறியாத ஆட்சியினர் சற்று விவரம் தெரிந்து தனது நிலைப்பாட்டை எடுக்கத்தான், அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட எதிர்க்கட்சிகளும், ஆளும் கூட்டணியில் சில கட்சிகளைத் தவிர மற்றவர்களும் கோரிக்கை விடுத்தும்கூட, அரசோ, முதலமைச்சரோ சற்றும் காது கொடுத்துச் செயல்படவில்லை.

இது அனுபவக் குறைவான அரசியல் மட்டுமல்ல; மக்களின் குரலை மதிக்காத அதிகாரப்போக்குமே ஆகும்.

இந்நிலையில் இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

**தனி ஆவர்த்தனம் செய்ய நினைத்துத் தனிமைப்பட்டு நிற்கிறார் முதலமைச்சர்.**

**தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சித் தலைவர்கள், விவசாயிகள் சங்கத்தினர் எல்லோரும்** MekedatuDam **விவகாரத்தில் கர்நாடகத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவது பயனளிக்காது என்று எச்சரித்தோம். கர்நாடகம் செல்ல வேண்டாம் என்று தமிழ்நாடு முதலமைச்சருக்குக் கோரிக்கை வைத்தோம்.**

**தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் தர முடியாது என்று திட்டவட்டமாக அறிவித்துவிட்ட மாநிலத்துடன் சட்டரீதியாகத்தான் போராட வேண்டும் என்பதே கடந்த காலத்தில் நாம் பெற்ற படிப்பினை. உபரி நீரை வெளியேற்றும் வடிகால் பகுதியாகத்தான் அவர்கள் தமிழ்நாட்டைப் பார்க்கிறார்கள்.**

### கேட்டைச் சாத்திய கர்நாடக அரசு!

**ஆனால், தான் கர்நாடகம் சென்றால் காவிரியைக் கையோடு எடுத்து வந்து விடலாம் என்று தமிழ்நாட்டின் புதிய முதலமைச்சர் நினைத்தாரோ என்னவோ... நமது எச்சரிக்கைகளை மீறி கர்நாடகம் செல்வதற்குத் தூது அனுப்பினார்.**

**தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் திறந்து விடச் சொல்லி CWMA உத்தரவிட்டதும் “நீங்கள் இப்போதைக்கு வர வேண்டாம்” என்று கேட்டைச் சாத்தி விட்டார்கள்.**

### கர்நாடகாவில் அனைத்துக் கட்சிக் கூட்டம்!

**இதுபோன்ற சூழ்நிலைகளை முன்பே கணித்துதான், தமிழ்நாட்டிலுள்ள அனைவரும் எச்சரித்தோம். இனியேனும் தமிழ்நாட்டின் உயிர்ப் பிரச்சினையான காவிரி விவகாரத்தை முதலமைச்சர் ஆலோசனைகளோடு அணுக வேண்டும்.**

**நமது முதலமைச்சரை வரவேண்டாம் என்று சொல்லிவிட்டு, கர்நாடகத்தில் ஆகஸ்ட் 2 அன்று அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு அம்மாநில முதலமைச்சர் அழைப்பு விடுத்து அவர்கள் அனைவரும் ஒற்றுமையாக இருப்பதைத் தனது செயலால் உணர்த்திவிட்டார்.**

**அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டுவது எப்போது? முடியுமா முடியாதா?**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

## முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு வரவேற்புரை! விவசாயிகளை வஞ்சிக்கும் த.வெ.க. அரசைக் கண்டித்து – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பினையேற்று

# தஞ்சையில் - உதயநிதி ஸ்டாலின் தலைமையில் இன்று ஆர்ப்பாட்டம்!

## தோழமைக் கட்சியினர் – கழக முன்னணியினர் – விவசாய சங்கத்தினர் கண்டன முழக்கமிடுகின்றனர்!

**தஞ்சை, ஆக. 3-**

**விவசாயக்கடன் முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டியும், மேகதாது அணை கட்டுவதை தடுக்க தவறிய த.வெ.க அரசை கண்டித்தும், டெல்டா மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவிக்க வேண்டியும் த.வெ.க. அரசைக் கண்டித்து திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று (03.08.2026 - திங்கட்கிழமை) காலை 10.00 மணியளவில் பனகல் கட்டிடம் அருகில், தஞ்சாவூரில் நடைபெறுகிறது.**

த.வெ.க. அரசைக் கண்டித்து நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவர் கே.என். நேரு அவர்கள் வரவேற்புரையாற்றுகிறார்.

ஆர்ப்பாட்டத்திற்கு சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமை வகிக்கிறார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தோழமைக்கட்சித் தலைவர்கள் எம்.எச்.ஜவாஹிருல்லா, மு.தமீமுன் அன்சாரி, நெல்லை முபாரக்,

இரா.ஜெயக்குமார், பி.சிவநேசன் தர்ம.சரவணன், ஏ.ஆரோக்கியசாமி ஆகியோர் கண்டன உரையாற்றுகின்றனர்.



இந்த ஆர்ப்பாட்டத்தில் கழக முன்னணியினர் திருச்சி என்.சிவா, எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், எஸ்.கல்யாணசுந்தரம், எஸ்.ரகுபதி, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கோவி. செழியன், டி.ஆர்.பி. ராஜா, ஆர்.வைத்திலிங்கம், செ.இராமலிங்கம், எஸ்.எஸ்.சிவசங்கர், சிவ.வீ.மெய்யநாதன், சி.வெ.கணேசன், ஏ.கே.எஸ். விஜயன், அன்னியூர் ஏ.சிவா, உ.மதிவாணன்,

எம்.பி.க்கள் ச.முரசொலி, கே.என். அருண்நேரு, கவிஞர் சல்மா,

மாவட்டச் செயலாளர்கள் பூண்டி கே.கலைவாணன், சாக்கோட்டை க.அன்பழகன், காடுவெட்டி ந.தியாகராஜன், க.வைரமணி, நிவேதா எம்.முருகன், என்.கௌதமன், கே.கே.செல்லபாண்டியன், டி. பழனிவேல், முன்னாள் இன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள் கா.அண்ணாதுரை, என்.அசோக்குமார், ஏனாதி ப.பாலசுப்பிரமணியன், சீ.கதிரவன், எம்.செந்தில் செல்வன், வை.முத்து ராஜா, எம்.ரெங்கசாமி, து.செல்வம், எம்.இராமச்சந்திரன், டி.கே.ஜி. நீலமேகம், கே.டி.மகேஷ் கிருஷ்ணசாமி, சி.இறைவன், த.காரல்மார்க்ஸ், குட்டி இரா. தெட்சிணாமூர்த்தி, சண்.இராமநாதன், டாக்டர்.அஞ்சுகம்பூபதி, சுப.தமிழழகன், ஆடுதுறை மு.உத்திராபதி, இராம.விஜயன், பழஞ்சூர் கே.செல்வம், வீ.ஜெயபிரகாஷ், கார்த்திகேயன்வேலுச்சாமி,

விவசாய சங்க நிர்வாகிகள் காவிரி வி.தனபால், கே.வி. இளங்கீரன், பூரா.விஸ்வநாதன், சுக்கரை ஆர்.சுகுமாறன், பி.கே.தெய்வசிகாமணி, என்.பழனியப்பன்,

கோபி.கணேசன், ஜி.எஸ். தனபதி, பி.ராமசாமி, பி. கோவிந்தராஜ், கே.எஸ்.முஹமது இப்ராஹீம்,

விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி நிர்வாகிகள் சு.சின்னையன், பி.ரவிச்சந்திரன், வை.வினோத்குமார், கரம்பயம் ஏ.ஆனந்த், க.சுப்பிரமணியன், க.அன்பழகன், எஸ்.டி.சேது, அடைக்கலம் செல்லமுத்து, என்.கருப்பையா, கோ.ரமேஷ், ஏ. ஜெகதீசன், கோ.வி.நாகராஜன் பி.எம்.கே. குறிச்சிமன்னன், எஸ்.பால்ராஜ், ஆர்.துரைராஜ், கொண்டல் இரா.முருகன், திருமணஞ்சேரி இரா.மனோகரன், க.தர்மதுரை, என்.ஆர். ராமதுரை, பொன்.பாரிவள்ளள், சி.அரங்கநாயகம், ஆர். சிவக்குமார், ஏ.சேகர், பூ.மதியழகன், பொன்.பன்னீர், ம.ராமசாமி உள்ளிட்ட விவசாய பெருங்குடி மக்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், விவசாய சங்க பிரதிநிதிகள், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள், இன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பேரூர், வட்ட, கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், முன்னாள், இன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழக தோழர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டு கண்டன முழக்கமிடுகின்றனர்.

தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ., நன்றி கூறுகிறார்.